# வாசுகி மஹால் கல்யாண மண்டபம்

புதுமண தம்பதிகள் தங்கள் வாழ்வில் அடியெடுத்து வைக்கும்முன் ஒலிக்கும் மகத்தான மந்திரம் "***மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவித ஹேதுநா / கண்டே பத்நாமி ஸுபகே ஸஜீவ ஸரதஸ்ஸதம் //***" (இந்த தாலி கயிறு, நான் வாழ்வதற்க்கு ஏதுவானது. இந்த மாங்கல்ய நூலை உனது கழுத்தில் கட்டுகிறேன். திருமகளே நீ நூறு ஆண்டுகள் வாழ்வாயாக!) மணமகன் தன்னுடைய வாழ்க்கையில் மனைவி எந்த அளவுக்கு இன்றியமையாதவள் என்பதை உணர்ந்த நிலையை வெளிப்படுத்தும் விதமாக, மனைவியின் மேன்மையை போற்றி அவள் பல்லாண்டு வாழ வாழ்த்தும் மந்திரம். மானிட தர்மத்தின் அடிப்படை ஆதாரக் கோட்பாட்டை இந்த மந்திரம் சொல்கிறது.

வாசுகி மஹாலில் ஒலிக்கும் இந்த மஹாமந்திர சக்தியுடன் மணவாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் மணமக்கள் நூறாண்டுகள் வளமுடனும், நலமுடனும், மகிழ்வுடனும் வாழ அடித்தளமிடும் அதிமுக்கிய இடமாக இருந்து வருகிறது இத்திருமண மண்டபம்.

கடந்த பல்லாண்டுகளாக நூற்றுக்கணக்கான புதுமண தம்பதிகளின் வாழ்வில் திருமண ஒளியேற்றிய வாசுகி மஹால் என்ற அனையா தீபம் இன்றும் என்றும் உங்கள் குடும்ப திருமணத்தில் ஒளியேற்ற அன்புடன் வரவேற்கிறது.

இந்திய திருநாட்டின் தமிழகத்தில் கொங்கு மண்டலத்தில் கோவை மாநகரில் தடாகம் ரோடு டி.வி.எஸ். நகர் (மேற்கு) பகுதியில் அமைந்துள்ள இத்திருமண மண்டபம் கடந்த பல்லாண்டுகளாக சிறப்பான முறையில் சேவை செய்து வருகிறது.

பெரிய விரிவான திருமண மண்டபத்தை சுற்றிலும் பசுமையான மரங்களும், அமைதியான சூழலும் மிகப்பெரிய பரவலான வாகன நிறுத்தமும் வாசுகி மஹாலின் சிறப்பு. மங்களகரமான நிகழ்ச்சிகளின் இடையே சகுனத்தடையாக கருதப்படும் ஒளியிழப்பைத் தவிர்க்க அமைக்கப்பட்ட மின் உற்பத்தி கருவியும் (Full Capacity Enviro Friendly Diesel Power Generator) மின்சேமிப்பு பயன்பாடு கருவியும் (U.P.S) வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கும் சேவையின் தரத்திற்கு சான்று.

மணமக்கள் குடும்பத்தார் தங்குவதற்கு ஏர்கண்டிசனர் பொறுத்தப்பெற்ற இரு அறைகளுடன் விசாலமான ஹால் மற்றும் இரு அறைகளும், மணமேடைக்கு பின்புறம் மணமகன் அறையும், மணமகள் அறையும் அமைந்துள்ளது.

திருமண நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது திருமண வரவேற்பு, திருமண நிச்சயதார்த்தம், சீமந்தம், சீர், யாக பூஜை, கூட்டு வழிபாடு, அன்னதானம், சமூக சமுதாய நிகழ்ச்சிகள் (அரசியல் தவிர்த்த பிற நிகழ்வுகள்) நடத்த உங்களை வரவேற்கிறோம்.

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இருந்து எல்லாவகையிலும் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்குவது எங்களது சிறப்பம்சம். மேலும் புதுமணத் தம்பதிகளுக்கு எங்களது நினைவுப் பரிசாக பூசையறையில் வைத்து வழிபடும் 54 புனித சக்கரங்களுக்கு நடுவில் வீற்றிருக்கும் திருவேங்கட பெருமாள் படம் அல்லது ஷிர்டி சாயி பாபா படம் வழங்குகிறோம்.


## வாசுகி மஹால் கல்யாண மண்டபம்,

TVS நகர் (மேற்கு), தடாகம் ரோடு, இடையர்பாளையம்,
கோயமுத்தூர் - 641025. தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி: +91.422.2405026, செல்லிடபேசி: 9842942506, 9443754864

Mail id: info@vasukimahal.com

Blog: http://www.vasukimahal.blogspot.com